පේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

DEPARTMENT OF TEXTILE INDUSTRY

වැය ශීර්ෂ අංක: 303

செலவினத் தலைப்ப இலக்கம்: 303

Expenditure Head No: 303

3 වන මහල, මහලේකම් කාර්යාල ගොඩනැගිල්ල, මාලිගාවත්ත, කොළඹ 10

3ஆம் மாடி,செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10

3rd Floor, Secretariat Building, Maligawatta, Colombo 10

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை புடவைக் கைத்தொழில் திணைக்களம்

அத்தியாயம் 01 : நிறுவனத் தோற்றப்பாடு

1.1 அறிமுகம்

கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் மேம்பாட்டின் நிமித்தம் கொள்கை உருவாக்கத்திற்கு ஆதரவளித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்இ மேற்பார்வை செய்தல்இ மதிப்பீடு செய்தல் உட்பட அனைத்து கைத்தறி புடவைக் கைத்தொழில் நடவடிக்கைகளையும் முறைப்படுத்துதல்இ மேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் அது தொடர்பாக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு நிலையங்கள் மூலம் கைத்தறி புடவைக் கைத்தொழில் துறைக்குத் தேவையான. அறிவு மற்றும் திறன் கொண்ட மனித வளத்தை உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் கைத்தறி புடவைக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, இலட்சியப் பணி, குறிக்கோள்கள்

நோக்கு

‘‘உள்நாட்டுத் தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை வெற்றிகொள்ளக்கூடிய வகையிலும் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமானதும் போட்டித்தன்மைமிக்கதுமான துணி உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.’’

இலட்சியப் பணி

‘‘அரச கொள்கைச் சட்டகத்தினுள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கத்தினூடாக கைத்தறி நெசவத்தொழில் துறையில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.’’

நோக்கங்கள்

- கைத்தறி நெசவுத் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக உரிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் மூலோபாய திட்டமிடல்.
- கொள்கைகளை அமுல்படுத்துதல், இணைப்பாக்கம் செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.
- கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆற்றல் விருத்தி மற்றும் திறன் விருத்தி.
- கைத்தறி நெசவுத் தொழில் துறையின் அபிவிருத்திக்காக தேவைப்படுகின்ற பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்
- துறைக்கான புதிய ஊழியர்களை பயிற்றுவித்தல்
- துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் வசதிகளை வழங்குதல்
- சந்தையை விரிவுபடுத்துதல் மற்றும் கைத்தறி நெசவு உற்பத்திகளை ஊக்குவித்தல்.
- நெசவுத் தொழில் துறையின் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கான நிறுவன இணைப்பாக்கம்
- கைத்தறி நெசவுத் தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- கைத்தறி நெசவுத் தொழில் துறைக்கான கலாசார மரபுரிமைகள் மற்றும் மரபுரீதியான அறிவினைபாதுகாத்தல்.

1.3 பிரதான பணிகள்

1.3.1 கைத்தறி நெசவுத் தொழில் துறைக்காக ஆலோசகர்களையும் புதிய நெசவாளர்களையும் பயிற்றுவித்தல்

- நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு பயிற்சிப்பெறுநர்களை ஆட்சேர்த்துப் பயிற்றுவித்தல்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற 14 நெசவுத் தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்ற நெசவுத் தொழில் பற்றிய ஆறு மாதகால ஆரம்பப் பயிற்சி பாடநெறி மற்றும் 13 மாதகால இறுதி சான்றிதழ் பாடநெறியின் ஊடாக உரிய பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்த முழுநேர பாடநெறிகள் மூலம் கைத்தறி நெசவுத் தொழில் தொடர்பாக

ஆழமான கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான பயிற்சி வழங்கப்படுகின்றது.

அதன்படி, 2024/2025 கல்வி ஆண்டுக்காக 150 பயிற்சி பெறுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. தகைமை பெற்ற பயிற்சி பெறுநர்களுக்காக 2024 பெப்ரவரி மாதம் 12-ஆம் தேதி இந்தப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

2023 கல்வி ஆண்டில் கல்வி பயின்று நெசவுத் தொழில் இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் கைத்தறி நெசவு வடிவமைப்பு பற்றிய உயர் பயிற்சிச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 2024 ஜூன் மாதம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1.3.2 பரீட்சைகள் நடத்தப்படுதல்

நெசவுத் தொழில் இறுதிச் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறி தொடர்பான பயிற்சி நடவடிக்கைகள்

2024 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான நெசவுத் தொழில் இறுதிச் சான்றிதழ் மற்றும் அடிப்படை பயிற்சி பாடநெறிகளுக்கான பரீட்சை 2025 பிப்ரவரி மாதம் 19, 20, 21 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது. இதில் நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த 52 மாணவர்களும் 19 வெளி விண்ணப்பதாரிகளும் தோற்றினர்.

- **கைத்தறி நெசவு வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறி தொடர்பான பரீட்சை நடவடிக்கைகள்**

வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்காக 2023 ஆகஸ்ட் மாதம் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு பாடநெறியின் இறுதியில் நடத்தப்பட்ட பரீட்சையானது 2024 ஆகஸ்ட் மாதம் 12, 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. கெட்டம்பே வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த 06 மாணவர்களும் கட்டுபெத்த வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த 08 மாணவர்களும் அதில் தோற்றினர். ஒரு வருட முழுநேர பாடநெறியாகிய இந்தப் பாடநெறி 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கட்டுபெத்த வடிவமைப்பு நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1.3.3 ஆற்றல் விருத்தி மற்றும் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நெசவுத் தொழிலில் ஈடுபடுகின்ற நெசவாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நெசவு ஆலோசகர்கள் வரை நீண்டு செல்லும் வகையில் நெசவுத் தொழில் துறையின் தர ரீதியான அபிவிருத்திக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் செயலமர்வுகளையும் ஒழுங்கு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் இதன் கீழ் இடம்பெறுகின்றது. கட்டுபெத்த ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் சேவை நிறுவனத்தில் கைத்தறி நெசவு துறையைச் சேர்ந்த புதிய தொழில்முயற்சியாளர்களாக 20 பயிற்சிபெறுநர்களை அபிவிருத்தி செய்வதற்கு கருத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பதவியணியினர், மாகாண அரச, கூட்டுறவு, தனியார் துறையைச் சேர்ந்த கைத்தறி நெசவுத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆற்றல் விருத்தியையும் திறன் விருத்தியையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டு 317 பேருக்கு குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 20 நடத்தப்பட்டன.

மேலும், வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் துறையில் ஈடுபட்டுள்ள 95 பேருக்கு குறுகிய கால பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

2024 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குறுகிய கால பயிற்சிப் பாடநெறிகள்

தொடர் இலக்கம்	பாடநெறியின் பெயர்	நடத்தப்பட்ட திகதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட இடம்
1	துணி மாதிரி பகுப்பாய்வு	2024.01.30 முதல் 2024.01.31 வரை	12	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
2	இரட்டைத் துணி நெசவு வடிவமைப்பு உருவாக்கம்	2024.02.07 முதல் 2024.02.09 வரை	16	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
3	வாப் பிரின்டின் வடிவமைப்பு உருவாக்கம்	2024.02.13 முதல் 2024.02.15 வரை	13	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்

4	சுவர் அலங்கார வடிவமைப்பு உருவாக்கம்	2024.02.27 முதல் 2024.02.29 வரை	20	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
5	டொபி வடிவமைப்பு பயிற்சி	2024.03.11 முதல் 2024.03.20 வரை	13	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
6	(Tie – Dye) கட்டு மற்றும் சாயம்	2024.04.02 முதல் 2024.04.04 வரை	16	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
7	நீள் பார்டர் வடிவமைப்பு உருவாக்கம்	2024.04.24 முதல் 2024.04.26 வரை	19	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
8	ஜம்தானி வடிவமைப்பு உருவாக்கம்	2024.05.07 முதல் 2024.05.10 வரை	13	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
9	பல்லு வடிவமைப்பு	2024.05.27 முதல் 2024.05.30 வரை	20	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
10	நூல் சுற்றும் இயந்திரத்தின் அறிமுகம்	2024.05.31	18	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
11	பெதம்பிலி வடிவமைப்பு	2024.06.05 முதல் 2024.06.12 வரை	12	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
12	சத்தபஹ வடிவமைப்பு உருவாக்கம்	2024.07.11 முதல் 2024.07.13 வரை	15	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
13	லெனோ நெசவு வடிவமைப்புகள்	2024.07.29 முதல் 2024.08.01 வரை	15	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்

14	சத்திரசிகிச்சை கோஸ் தயாரித்தல்	2024.08.26 முதல் 2024.08.30 வரை	14	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
15	இயற்கை நிறமூட்டல்	2024.10.05 முதல் 2024.10.11 வரை	22	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
16	லெனோ நெசவு வடிவமைப்புகள்	2024.11.19 முதல் 2024.11.22 வரை	19	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
17	சீர்சக்கர் நெசவு வடிவமைப்புகள்	2024.12.17 முதல் 2024.12.22 வரை	16	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
18	கைத்தறித் துணிகளிலிருந்து ஆபரண உற்பத்தி	2024.11.05 முதல் 2024.11.06 வரை	16	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
19	ஒசரியையும் சாரியையும் ஆயத்த ஆடையாக வடிவமைத்தல்	2024.08.20 முதல் 2024.08.23 வரை	12	கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனம்
20	கைத்தறி நெசவு உற்பத்தி அபிவிருத்தி எண்ணக்கருக்கள்	2024.12.16 முதல் 2024.12.20 வரை	16	மொறட்டுவ பல்கலைக் கழகம்

1.3.4 கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக வெளிக்கள பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்

தொடர் இலக்கம்	பாடநெறியின் பெயர்	நடத்தப்பட்ட திகதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட இடம்
1	பல்லு வடிவமைப்பு	2024.02.26 முதல் 2024.02.29 வரை	15	அம்பாறை புடவைக் கைத்தொழில் திணைக்களம்
2	கோழிக்கால் வடிவமைப்பு	2024.03.05 முதல் 2024.03.08 வரை	15	அம்பாறை புடவைக் கைத்தொழில் திணைக்களம்
3	பல்லு வடிவமைப்பு	2024.02.13 முதல் 2024.02.16 வரை	13	மரதகஹமுல புடவைக் கைத்தொழில் திணைக்களம்
4	ஹக்கபெக்க வடிவமைப்பு	2024.07.02 முதல் 2024.07.05 வரை	22	போயகனே புடவைக் கைத்தொழில் திணைக்களம்
5	வண்ணக் கலவைகள்	2024.08.26 முதல் 2024.08.30 வரை	15	திருகோணமலை புடவைக் கைத்தொழில் திணைக்களம்
6	கெச்காட் வடிவமைப்பு	2024.05.06 முதல் 2024.05.10 வரை	15	திருகோணமலை புடவைக் கைத்தொழில் திணைக்களம்

1.3.5 கைத்தறி நெசவுத் தொழில் துறையில் தொழில்சார் தகைமைகளை வழங்குதல்

கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு தொழில்சார் தகைமைகளை வழங்கும் நோக்கத்துடன் 514 நெசவாளர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமைகள் கட்டமைப்பின் கீழ் முன்கூட்டிய கற்றல்களை இனங்காண்பதற்கான முறையியல் ஊடாக அவர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேசிய தொழில்சார் தகைமை 3 மற்றும் 4 மட்டங்களில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1.3.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

கைத்தறி நெசவுத் தொழில் துறைக்குரிய மின்சாரத்தினால் இயங்கும் வெற்றிகரமான நூல் சுற்றும் இயந்திரம் ஒன்று தனியார் துறை மற்றும் மாகாணசபைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

1.3.7 கைத்தறி நெசவுக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்

மிகவும் பயனுள்ள ஒரு வாழ்வாதார வழியாக கைத்தறி நெசவுத் தொழிலை கிராமிய மட்டத்தில் விஸ்தரிக்கும் நோக்குடன் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நாட்டின் பல்வேறுபட்ட மாவட்டங்கள் உள்வாங்கப்படும் வகையில் கைத்தறி நெசவுத் தொழில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்புடைய பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு கைத்தறி நெசவுத் தொழில் பற்றிய ஆறு மாத கால பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான கைத்தறி சாதனங்கள் மற்றும் மூலப் பொருட்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்கி, பயிற்சி பெற்ற பயனாளிகளை தொழில்மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	மாவட்டம்	பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை
1	கல்கமுவ கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	குருநாகல்	16
2	கலல்பிட்டிய கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	கம்பஹா	15
3	காலேவெவ கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	குருநாகல்	13
4	மரலுவாவ கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	குருநாகல்	15
5	மாளிகாதென்ன கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	கம்பஹா	16
6	ஹதரலியத்த கைத்தறி நெசவுக் கருத்திட்டம்	கண்டி	11
மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை			**86**

1.3.8 தேசிய கைத்தறி புடவைப் போட்டி, கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா நடத்தப்படுதல்

கைத்தறி நெசவுத் தொழில் துறையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உள்நாட்டுத் துணிகளை உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல், ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் திறமைகளை பாராட்டுவதற்காக வருடாந்தம் நடத்தப்படுகின்ற தேசிய புடவைப் போட்டியின் இறுதி முடிவுகளை தீர்மானிக்கும் நடவடிக்கைகள் 2024 அக்டோபர் மாதம் 25ஆம் தேதி கட்டுப்பெத்த நெசவுப் பயிற்சி நிறுவன வளாகத்தில் நடத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற நெசவாளர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கும் விழா 2024 டிசம்பர் மாதம் 6ம் தேதியும், தேசிய கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை 2024 டிசம்பர் மாதம் 6,7 மற்றும் 8 ஆகிய தேதிகளிலும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்தப்பட்டன.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- தாபனப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- கணக்குப் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

பின்வரும் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கிவருகின்றன.

i. ஆராய்ச்சி, பயிற்சி, வடிவமைப்பு மற்றும் சேவைகள் பிரிவு

ii. 1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை.
புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிலையங்கள்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் புடவைக் 14 கைத்தொழில் பயிற்சி நிலையங்களும், வடிவமைப்பு பயிற்சி 02 குகின்றனநிலையங்களும் இயங்

தொடர் இலக்கம்	நிறுவனம்	முகவரி
01	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கடுபெத்த	280/11/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை
02	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கொட்டல	கொட்டல, வேயங்கொடை
03	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – போயகனே	போயகனே, குருணாகல்
04	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் பின்னவல -	பின்னவல, ரம்புக்கனை
05	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி	அருப்பல வீதி, வடபுளுவ, கண்டி

	நிலையம் – வடபுளுவ	
06	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கெடபே	கெடபே, பேராதெணிய
07	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தளை	கொன்கஹமுல, பலாபத்வல, மாத்தளை
08	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தறை	ஹக்மன, மாத்தறை
09	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் கிரம -	மித்தெனிய வீதி, கிரம
10	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – பண்டாரவளை	கிணிகம, பண்டாரவளை
11	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் தலாவ -	மிஹிரிகம, தலாவ
12	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் காலி -	கலேகான வீதி, கிங்தொட, காலி
13	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – நல்லூர்	194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
14	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – சம்மாந்துறை	சம்மாந்துறை
15	உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கடுபெத்த	1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை
16	உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கெடபே	கெடபே, பேராதெணிய

அத்தியாயம் 02 : முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 நிறுவனத்தின் முன்னேற்றம்

2. தேசிய கைத்தறி நெசவுச் சான்றிதழ் ஒரு வருட முழுநேர பாடநெறியின் 2024/ 2025 கல்வி ஆண்டுக்காக 87 பயிற்சி பெறுநர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு தற்போது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2023/ 2024 ஆம் கல்வி ஆண்டில் மேற்படி பாடநெறியைப் பயின்ற சுமார் 85 மாணவர்கள் தற்போது துறையில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பாடநெறியின் தர ரீதியான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பாடத்திட்டத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் திருத்துதல் ஆகியன இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

3. பணியிடைப் பயிற்சி பாடநெறியின் கீழ் கைத்தறி நெசவு வடிவமைப்பு பயிற்சிச் செயலமர்வுகள் 17 நடத்தப்பட்டுள்ளன. இந்த பயிற்சிச் செயலமர்வுகளில் பங்கு பற்றிய பெரும்பாலான பயிற்சி பெறுநர்கள் நெசவு ஆலோசகர்கள் என்பதோடு அதன் ஊடாக புதிய வடிவமைப்பு எண்ணக்கருக்கள் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

4. கைத்தறி நெசவுத் தொழில் துறையின் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் 03 பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டதோடு இதில், துறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களும் நுண் மற்றும் சிறிய அளவிலான கைத்தறி நெசவுத் தொழில் துறையில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களும் பங்கேற்றனர். உற்பத்தி அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பயிற்சிச் செயலமர்வுகளாக இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

5. கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதையும் பெண்களை வலுவூட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு கிராமிய கைத்தறி நெசவு சுயதொழில் கருத்திட்டங்கள் 06இன் ஊடாக 86 பயனாளிகளைப் பயிற்றுவிக்கும் குழுக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனூடாக சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், தொடர்ச்சியான பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகளின் மூலம் தொழில்முயற்சியாளர்களாக அபிவிருத்தி செய்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

6. கைத்தறி நெசவுத் தொழில் துறையில் பயன்படுத்துகின்ற பல்வேறுபட்ட வடிவமைப்பு பாங்குகள் உள்ளடங்கிய நூல் ஒன்றை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது அத்தகைய ஒரு கையேடு

வெளியிடப்படவில்லை என்பதோடு அதற்கான மாதிரிகளைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

7. புதிய ஆராய்ச்சிகளின் கீழ் பல்வகையான மூலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு உற்பத்தி மாதிரிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த மாதிரிகளை முழுமையான உற்பத்திகளாக அபிவிருத்தி செய்வதன் சாத்தியம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8. பயிற்சிபெறுநர்களுக்கு தரமான கற்றல் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பயிற்சி நிறுவனங்களைத் திருத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி போயகனே நெசவுப் பயிற்சி நிறுவனத்தின் கூரையின் திருத்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நாட்டில் காணப்படுகின்ற ஒரே ஒரு கைத்தறி நெசவு வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் ஆகிய கட்டுபெத்த நெசவுப் பயிற்சி நிறுவனத்தின் கூரை மற்றும் உட்கூரை என்பவற்றினது திருத்தப் பணிகளின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2.2 நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

❖ **கைத்தறி நெசவுத் துறைக்கான பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்**

- நெசவுப் பயிற்சி நிறுவனங்களின் மூலம் நெசவுத்தொழில் துறையில் செயல் முனைப்புடன் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களைப் பயிற்றுவித்தல்.
- நெசவுப் பயிற்சி நிறுவனங்களின் பாடவிதானங்களை தேசிய தொழில்சார் தகைமைகளுக்கு சமநிலையாகும் வகையில் அபிவிருத்தி செய்தல்.
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- பணியிடைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு பாடநெறிகள் 25ஐ நடாத்துவதன் மூலம் நெசவுத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள 400 நெசவாளர்களைப் பயிற்றுவித்தல்.
- உற்பத்தி பல்வகைப்படுத்தல் பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்
- கைத்தறி நெசவுத் துறைக்கான தொழில் முயற்சி ஊக்குவிப்பு
- கிராமியப் பிரதேசங்களில் கைத்தறி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக வடிவமைப்பு செயலமர்வுகளை நடத்துதல்.
- மாகாண அரச, கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துதல்.

❖ **கைத்தறி நெசவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்**

- கிராமிய மட்டத்தில் கைத்தறி நெசவு சுயதொழில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.
- மேற்படி கருத்திட்டங்கள் மூலம் நெசவுத் தொழில் துறையில் செயல் முனைப்புடன் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களை உருவாக்குதல்.
- கைத்தறி நெசவுத் தொழில் துறைக்குரிய தேசிய தொழில்சார் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்காக நெசவாளர்களை ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

❖ **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- கைத்தறி நெசவுச் சாதனங்கள் மற்றும் பாகங்களை மேம்படுத்துதல்

- இயற்கை வண்ணங்களை உபயோகித்து கைத்தறி துணி உற்பத்திகளை அறிமுகம் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை விரிவாக்குதல்.
- கைத்தறி வடிவமைப்புக்கான வடிவமைப்பு நூலைத் தயாரித்தல் மற்றும் துறைக்கு அறிமுகம் செய்தல்

❖ **கைத்தறி நெசவு தொழில்துறைக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்**

- தேசிய கைத்தறி புடவைக் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவை நடத்துதல்.
- கைத்தறி நெசவு உற்பத்தி ஊக்குவிப்புக்காக விற்பனை சந்தைகள் இரண்டு வருடத்தில் நடத்தப்படுதல்

❖ **கைத்தறி நெசவுத் தொழில் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

- புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான பயிற்சி நிலையங்களில் இனங்காணப்பட்ட அத்தியாவசிய திருத்தங்களை மேற்கொள்ளல்

2.3 சவால்கள்

❖ போதிய பதவியணி இன்மை

❖ தொழில்நுட்ப அறிவுடன்கூடிய பதவிகள் திணைக்களத்தின் பணியாட்டொகுதியில் காணப்படாமை

❖ போதிய இட மற்றும் வசதிகளுடன் கூடிய சேவை நிலையம் காணப்படாமை

❖ அங்கீகரிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பணியாட்டொகுதியிலும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை.

❖ கைத்தறி நெசவுக்காக தேவைப்படும் மூலப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்தல்

❖ கைத்தறி உற்பத்திகளுக்காக போதிய சந்தை வாய்ப்புகள் காணப்படாமை

❖ கைத்தறி துணி உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கப்படாமை மற்றும் வெளிநாட்டு சந்தை இலக்காகக் கொள்ளப்படாமை.

2.4 நிறுவனத் தலைவரின் கையொப்பம்



பெயர்: யூ.வீ.எஸ். சேனானி செனெவிரத்ன
பதவி: பணிப்பாளர்

அத்தியாயம் 03: ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை

வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	உண்மையான		
			நடப்பு வருடம் ரூ.ச		கடந்த வருடம் ரூ.ச
-	**வருமான வரவுகள்**		-		-
-	வருமான வரி	1	-		-
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	2	-		-
-	சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள்	3	-		-
-	வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனைய	4	-		-
-	**மொத்த வருமான வரவுகள் (அ)**		-		-
-	**வருமான அல்லாத வரவுகள்**		-		-
-	திறைசேரி கட்டுநிதி		150,484,000.00		1116,717,000.00
-	வைப்புகள்		7,655,988.00		499,579.00
-	முற்பண கணக்குகள்		8,450,935.00		6,366,570.00
-	பிற பிரதான பேரேட்டுக் கணக்கு வரவுகள்		-		-
-	**மொத்த வருமானம் அல்லாத வரவுகள் (ஆ)**		**166,600,923.00**		**123,583,143.00**
-	**மொத்த வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் இ = (அ) + (ஆ)**		**166,600,923.00**		**123,583,143.00**

வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	**உண்மையான**		
			நடப்பு வருடம் ரூ.ச		**கடந்த வருடம் ரூ.ச**
-	**திறைசேரிக்கான பணம் அனுப்பல்கள் (ஈ)**				**1,200,000.00**
-	**நிகர வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் உ = (இ) – (ஈ)**		**166,600,923.00**		**123,583,143.00**
-	**கழிக்கப்பட்டது: செலவுகள்**		-		-
-	**மீண்டெழும் செலவுகள்**		-		-
86, 920,000.00	வேதனங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள்	5	82,364,725.00		70,068,156.00
28.090,000.00	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	24,285,964.00		23,415,183.00
214,560,000.00	நிவாரணங்கள், சலுகைகள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	208,334,646.00		253,780,653.00
-	வட்டி செலுத்துதல்கள்	8	-		-
-	ஏனைய மீண்டெழும் செலவுகள்	9	-		-
329,570,000.00	**மொத்த மீண்டெழும் செலவுகள் (ஊ)**		**314,985,335.00**		**347,263,991.00**
	மூலதன செலவுகள்				
33,200,000.00	மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு	10	11,395,349.00		7,949,094.00
1,700,000.00	மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்	11	1239,989.00		

-	மூலதன மாற்றல்கள்	12	-		-
வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	**உண்மையான**		
			நடப்பு வருடம் ரூ.ச		**கடந்த வருடம் ரூ.ச**
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-		-
-	ஆற்றல் விருத்தி	14			-
44,000,000.00	ஏனைய மூலதனச் செலவுகள்	15	40,990,810.00		27,448,614.00
78,900,000.00	**மொத்த மூலதனச் செலவுகள் (எ)**		**52,626,149.00**		**35,397,708.00**
	வைப்புத்தொகை செலுத்தல்		7,454,760.00		257,180.00
	முற்பணம் செலுதத்தல்		6,484,727.00		6,333,064.00
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்துதல்		-		-
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஏ)		13,939,487.00		6,590,244.00
	மொத்தச் செலவு ஐ = (ஊ + எ + ஏ)		**381,550,971.00**		**389,251,943.00**
408,470,000.00	**டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை ஒ = (உ-ஐ**		**(214,950,048.00)**		**(266,868,794.00)**
	கட்டுநிதி இணக்க அறிக்கையின்படி நிலுவை		**(214,950,048.00)**		**(267,097,794.00)** **229,000.00**
	டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை		-		**229,000.00**

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2024 ரூபா	2023 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	246,495,516	268,815,527.00
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	17,200,894	19,167,102.00
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	229,000
மொத்த சொத்துக்கள்		**263,696,410.00**	**288,211,629.00**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		16,628,567	19,035,003.00
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		246,495,516	268,815,527.00
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	572,327	361,099.00
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**263,696,410.00**	**288,211,629.00**

பக்க இலக்கம் ..7.. முதல் ..28.. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ..29.. முதல் ..37.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது எனபதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை விளைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 27/02/2025

J.M. Thilaka Jayasundara
Secretary
Ministry of Industry and Entrepreneurship Development
73/1, Galle Road, Colombo 03.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி 20/02/2025

U.V.S. Senani Seneviratne
Director
Department of Textile Industry
3rd Floor, Secretariat Building,
Maligawatta, Colombo 10.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 18/03/2025

H. G. Nandani
Accountant
Department of Textile Industry
3rd Floor,
Secretarial Bulding,
Maligawatta, Colombo 10.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	நடப்பு வருடம் **ரூ.ச.**	**கடந்த வருடம்** **ரூ.ச.**
<u>தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்</u>		
மொத்த வரி வரவுகள்	-	-
கட்டணங்கள், மிகைகள், தண்டப் பணம், மற்றும் உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத வரவுகள்	-	-
ஏனைய வருமானத் தலைப்புகளின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானம்	8,237,986.00	5,900,551.00
கட்டுநிதி வரவுகள்	150,484,000.00	116,717,000.00
முற்பண அறவிடல்		5,216,810.00
வைப்பு வரவுகள்	7,665, 988.00	499,579.00
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல்கள்(அ)	**171,281,989.00**	**128,333,940.00**
<u>கழிக்கப்பட்டது-பணச் செலவுகள்:</u>		
பணியாளர்களின் சம்பளம் மற்றும் தொழிற்பாட்டு	106,305,189.00	92,385,868.00

செலவுகள்		
நிவாரணங்கள் மற்றும் மாற்றல்கள்	1,025,923.00	233,870.00
ஏனைய செலவுத் தலைப்புகளுக்காக உறப்பட்ட செலவுகள்	9,129,576.00	
திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி	229,000.00	1,200,000.00
முற்பணம் செலுத்துதல்	4,711,022.00	6,333,064.00
வைப்புத்தொகை செலுத்துதல்	7,454,760.00	257,180.00
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	**128,855,470.00**	**100,409,982.00**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**42,426,514.00**	**27,923,958.00**
முதலீட்டு நடவடிக்கைகளால் கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரித்து நீங்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
முற்பண அறவீடு	-	-
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஈ)		-
கழிக்கப்பட்டது-பணச் செலவு;		
மூலதன செலவு	**42,655,519.00**	**27,694,958.00**

முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	42,655,519.00	27,694,958.00
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(42,655,519.00)	(27,694,958.00)
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	229,000.00
<u>நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப்பாய்ச்சல்</u>		
உள்நாட்டுக் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
கொடை வரவுகள்	-	-
வைப்பு வரவுகள்	-	-
நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
<u>கழிக்கப்பட்டது-பணச் செலவு;</u>		
உள்நாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல்	-	-
வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல்	-	-
நிதி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஐ)	-	-
நிதி நடவடிக்கைகளில்	-	-

இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஒ)=(எ)-(ஐ)		
நிதியின் நிகர மாற்றங்கள் (ஓ)=(எ)-(ஒ)		229,000.00
ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப நிலுவை	-	-
டிசம்பர் 31 ஆம் திகதியில் இறுதி நிலுவை	-	229,000.00

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1) அறிக்கையிடல் காலப்பகுதி

2024 சனவரி 01தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காணப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைகின்றது.

2) அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு சில சொத்துக்களுக்கான வரலாற்றுக் கிரயமானது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு முன்னேற்றப்பட்டுள்ளது. வேறுவகையில் காட்டப்படாதுள்ளபோது கணக்குத் தயாரிப்புகள் மேம்படுத்தப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
நிதிக் கூற்றுக்களானவை இலங்கை நாணயத்தில் அண்மித்த ரூபாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3) வருமானம் இனங்காணப்படுதல்

பரிமற்று மற்றும் பரிமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கப்பட வேண்டிய கால எல்லைகளைப் புறக்கணித்து பணம் கிடைக்கப்படும் காணப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

சொத்தின் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் என்பதற்கான உறுதிப்பாடு காணப்படுகின்றபோது மற்றும் அச்சொத்துக்களை நம்பகமான முறையில் அளவிட முடியுமாக இருக்குமாயின் அச்சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படும்.
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயத்தில் இனங்காணப்படுவதோடு கிரய மாதிரி ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படும்.

5) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒத்த கணக்காகும்.

6) காசும் காசுக்குச் சமமானவைகளும்

2024 டிசெம்பர் 31ஆம் திகதியில் கையிருப்பு உள்நாட்டு புழக்க நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் என்பன காசும் காசுக்குச் சமமானவைகளுமாகும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		வசூலித்த வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக
2002.01.00 2002.01.01	வாடகை அரச கட்டிடங்களின் வாடகை	800,000.00	800,000.00	2,429,90.00	303%
2002.02.99	வட்டி	750,000.00	750,000.00	670,672.00	
2003.99.00	ஏனைய வரவுகள்	900,000.00	900,000.00	1,756,704.00	
2004.01.00 2004.01.00	சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் மத்திய அரசாங்கம்	3,300,000.00	3,300,000.00	3,390,700.00	

3.6 மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதன் செயல்திறன்

ஒதுக்கீட்டு வகை	மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	320,800,000.00	329,570,000.00	314,985,335.00	98.18%
மூலதன	78,900,000.00	78,900,000.00	52,626,149.00	66.70%

3.7 நிபி..208 இன்படி, ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

தொ.இ.	ஒதுக்கீடுகள் கிடைத்த அமைச்சு/திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான விலை ரூ.	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள்,வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் %மாக
			ஆரம்ப ஒதுக்கீடுகள் ரூ.	இறுதி ஒதுக்கீடுகள் ரூ.		
130	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்				
149	கைத்தொழில் அமைச்சு	தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை– NVQ சான்றிதழ்களைப் பெறுதல்	16,540,000.00	16,540,000.00	9,129,576.00	55.19%
253	ஓய்வூதியத் திணைக்களம்	முற்பண கடன்களைத் தீர்த்தல்	1,495,449.00	1,495,449.00	1,495,449.00	100%

3.8 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையிடலுக்கான செயல்திறன

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டின் விபரம்	2022.12.31ஆம் திகதியில் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை	2022.12.31 ஆம் திகதியில் நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் நிலுவை	எதிர்காலத்தில் கணக்கிடப்படவுள்ள	முன்னேற்றம் % மாக அறிக்கையிடப் படுதல்
9151	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்	118,816,125.00	118,816,125.00	-	100%
9152	இயந்திர சாதனங்கள்	50,070,083.00	50,070,083.00	-	100%
9153	காணி	86,161,850.00	86,161,850.00	-	100%
9154	அருவச் சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இலக்கம்: IMT/D/DTI/2024/10 திகதி: 2025 மே 28

பணிப்பாளர்

புடவைக் கைத்தொழில் திணைக்களம்.

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

மேற்படி அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களின் மூலப் பிரதி (சிங்களம், ஆங்கிலம், தமிழ்) இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டப்ளியூ.ஜீ.ஆர்.என்.வீரக்கொடி
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
பதிற்கடமை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

பிரதி: 01. பணிப்பாளர் நாயகம், அரசாங்கக் கணக்குகள் திணைக்களம்.

02. செயலாளர் – கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

எனது இலக்கம்: IMT/D/DTI/2024/10 திகதி: 2025 மே 28

பணிப்பாளர்,

புடவைக் கைத்தொழில் திணைக்களம்.

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

----

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களைக் கொண்டமைந்த 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் நிதிநிலைமை, நிதி செயலாற்றல் மற்றும் நிதிப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்காக குறிப்புகள் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி கூற்றுக்களை தயாரிப்பதன் அடிப்படைக்கு அமைவாக அனைத்து பொருண்மையான தன்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது

கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 விடயம் ஒன்றை வலியுறுத்துதல் - நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் அடிப்படை

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 1 இன் மீது கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நிதிக்கூற்றுக்கள் ஆனவை அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150, 151 மற்றும் 2025 பிப்ரவரி மாதம் 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் மாதம் 16 ஆம் தேதிய அரசாங்க கணக்குகள் பற்றிய வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் படி புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக அமையலாம். எனது அறிக்கை புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினதும் திறைசேரியினதும் இலங்கை பாராளுமன்றதினதும் பயன்பாட்டினை நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு

அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150, 151 மற்றும் 2025 பிப்ரவரி மாதம் 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதிய அரசாங்க கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இக்கு அமைவாக அனைத்து பொருண்மையான தன்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமை வெளிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவைப்படும் உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திணைக்களமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு அலுவலர் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் ஆக்கவிளைவு தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து அதன்

பிரகாரம் முறைமையை பயனுள்ள வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும்; பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைத்துச் செயற்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லையென்ற போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும்

நிகழ்வுகளும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியிருப்பதனை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர் விழிப்பூட்டப்பட்டுள்ளார்.

2. ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த விதப்புரைகள் நடைமுறைபடுத்தப்பட்டிருந்தன.

3. நிதிசார் மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் 4 கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரியதாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் 11,437,450 ரூபா குத்தகை நிலுவையாக காணப்பட்டது.

3.2 செலவு முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் 03 செலவு தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் நிதி ஒழுங்கு விதி 66இன்கீழ் வேறு செலவுத் தலைப்புகளுக்கு மாற்றியதன் பின்னரும் அந்த செலவுத் தலைப்புகளின் தேறிய ஒதுக்கீட்டின் மீது மேற்கொண்டும் எஞ்சியவை நூற்றுக்கு 27 முதல் 42 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) மூலதன செலவுத் தலைப்புகளின் கீழ் மென்பொருள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த 1,900,000 ரூபா ஒதுக்கீட்டில் நிதி ஒழுங்கு விதி 66 இன் கீழ் செலவு விடயங்களுக்காக 450,000 ரூபா மாற்றியதன் பின்னரும் அந்த செலவு விடயத்தின் தேறிய ஒதுக்கீடு 1,450,000 ரூபா எஞ்சியிருந்தது.

(இ) மூலதன செலவுத் தலைப்புகளின் கீழ் காணப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புகள் சார்பாக 27,000,000 ரூபா நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிதி ஒழுங்கு விதி 66 இன் கீழ் மேலும் 5,000,000 ரூபா மாற்றப்பட்டுள்ள போதிலும் 2024 டிசம்பர்

31 ஆம் திகதியில் 295,190 ரூபாவாக மொத்த தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 6.88 மட்டுமே ஆகும்.

(ஈ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நெசவு பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் சுற்றுலா பங்களாக்கள் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய 2024 நவம்பர்- டிசம்பர் காலப்பகுதிக்கான 61, 243 ரூபா பெறுமதி கொண்ட நிலுவை மீதி 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படவில்லை என்பதால் நல்லூர் நெசவுப் பாடசாலை உள்ளிட்ட சில பாடசாலைகளுக்கு சிவப்பு அறிவித்தல் கிடைத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுகாமை

சட்டதிட்டங்கள்/கட்டளைக்கான தொடர்பு	அவதானிப்பு
(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை	
(அ) நி.ஒ.94(2) மற்றும் (3)	2024 ஆம் ஆண்டுக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டிய 08 வகை செலவுகளின் மொத்தத் தொகை 611,923 ரூபா 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ள போதிலும் அவை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ) நி.ஒ.371 (5)	18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 140,500 ரூபா முற்பணத்தைத் தீர்ப்பதற்காக 01 மாதத்திற்கும் 1 ½ மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.
(இ) நி.ஒ.396	544,731 ரூபா பெறுமதியான 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத 28 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) நி.ஒ.752(2)	2023 ஆம் ஆண்டில் பொருள் கணிப்பீட்டுச் சபையினால் அழிப்பதற்கு விதப்புரை செய்த 99 உருப்படிகள், விற்பனை செய்வதற்கு விதப்புரை செய்யப்பட்ட 22 உருப்படிகள் என்பவற்றுக்காக வழங்கப்பட்ட கட்டளைகள்

	நடைமுறைபடுத்தப்பட்டிக்கவில்லை.
(ii) 2024 சனவரி 10 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 2.1 பிரிவு	மேலதிக நேரக் கொடுப்பணவு மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என்பவற்றுக்காக 200,000 ரூபா நிதி ஒழுங்குவிதி 66 இன் கீழ் மாற்றிக்கொள்ளப்பட்டிருந்தது.

அத்தியாயம் 4 : செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

	விசேட சுட்டி	எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியின் சதவீதமாக(%) தற்போதைய உற்பத்தி		
		100% - 90%	75% - 89%	50% - 74%
1	நெசவுப் பயிற்சி நிறுவனங்களால் 110 புதிய மாணவர்களைப் பயிற்றுவித்தல்		✓	
2	ஆற்றல் விருத்தியின் கீழ் 25 குறுகியகால பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்	✓		
3	கிராமிய மட்ட 10 சுய தொழில் குழுக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்		✓	
4	கிரமிய மட்ட நெசவாளர்களை இலக்காகக் கொண்டு 10 வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்		✓	
5	தேசிய கைத்தறி புடவைப் போட்டி, கண்காட்சி நடத்தப்படுதல்	✓		
6	கைத்தறி நெசவுத் தொழில் துறையில் 50 கைத்தொழிலாளர்களுக்கு விற்பனை சந்தை மூலம் விற்பனை வசதிகளை வழங்குதல் மற்றும் உற்பத்தி ஊக்குவிப்பு	✓		

அத்தியாயம் 05 ;நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை(SGD) அடைவதன் செயலாற்றுகை

இலக்குகள்/ நோக்கங்கள்	இலக்குகள்	வெற்றி சுட்டிகள்	இதுவரை வெற்றி பெற்றதன் முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
4.4 2030 ஆம் ஆண்டளவில் கண்ணியமான வேலை மற்றும் தொழில் முனைவு என்பவற்றுக்காக தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் தகைமைகள் உட்பட உரிய திறன்களைப் பெற்றுள்ள இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் எண்ணிக்கையை கணிசமான மட்டத்தில் அதிகரித்தல்.	2030 ஆம் ஆண்டளவில் கைத்தறி நெசவுத் துறையில் 1000 புதிய தொழில்வாண்மையாளர்களை பயிற்றுவித்தல்.	2024 ஆம் ஆண்டில் 158 புதிய தொழில்வாண்மையாளர்கள் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர்		✔	
9.2 அனைவரும் உள்ளடங்குகின்ற மற்றும் நிலைபேறான கைத்தொழில் மயமாக்கத்தை ஊக்குவித்தல், 2030 ஆம் ஆண்ட ளவில் தேசிய நிலைமைகளுக்கு அமைவான தொழில் வாய்ப்புகளை வழங்கும்போது கைத்தொழில் துறையின் பங்களிப்பு கோடிட்டு காட்டப்படும் வகையில் அதிகரிக்கப்படுதல் மற்றும் ஆகக்குறைந்தது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்த நிலைமையை இரட்டிப்பாக்குதல்.	2030 ஆம் ஆண்டளவில் கைத்தறி நெசவுத் துறையில் 800 புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்	2024 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவுத் துறையில் 84 புதிய தொழில் வாய்ப்புகளை ஆரம்பித்தல்	✔		

அத்தியாயம் 06 : மனிதவள தோற்றப்பாடு

6.1 ஆளணி (பதவியணி) முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நடப்புப் பதவியணி	வெற்றிடங்கள் / மிகை
சிரேஸ்ட	07	05	02
மூன்றாம் நிலை	01	01	0
இரண்டாம் நிலை	128	83	40
ஆரம்பநிலை	42	29	13

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின் மீது மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்

- திணைக்களத்தின் இலக்குகளை அடைவதற்காக மனிதவளப் பற்றாக்குறை ஆனது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்பப் பதவிகளில் மட்டுமன்றி அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் போன்ற அனைத்துப் பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. உள்ளக கணக்காய்வாளர் பதவியும் வெற்றிடமாக காணப்படுகின்றது.
- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியானது திணைக்களத்தின் பணியாட்டொகுதியில் உள்ளடங்காததால் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பாரிய சிரமங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளது.
- மேலும், நெசவுத் துறையின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் இல்லை என்பதோடு அதற்கு தேவையான தொழில்நுட்பப் பதவிகளும் அங்கீகரிக்கப்படவில்லை. அந்த நிலைமையும் ஒரு கைத்தொழிலாக அபிவிருத்தி செய்யும்போது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இயற்கை வண்ணங்களை பயன்படுத்திய கைத்தறி புடவை உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- கைத்தறி வடிவமைப்புகளுக்கான வடிவமைப்பு நூல் தயாரிக்கப்படுதல் மற்றும் துறைக்கு அறிமுகப்படுத்தப்படுத்தப்படுதல்

அத்தியாயம் 07 : இணக்க அறிக்கை

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
1	**பின்வரும் நிதிக்கூற்றுக்கள்.'.கணக்குகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல்(நி.பி.445)**			
2.1	பொதுநிருவாக சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
2.2	தனிப்பட்ட சம்பளப் பதிவேடுகள்/தனிப்பட்ட சம்பள அட்டைகள் இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.5	சகல மாதாந்தக் கணக்குச் சுருக்கங்களும் (ஊஐபுயுளு) தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.7	பொருட்பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
2.8	இருப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.9	சேத இழப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.10	பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.11	அடிச்சீட்டு புத்தகப் பதிவேடு (புயு-லீ20) இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
03	**நிதி நிர்வாகத்திற்காக செயற்பாடுகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்தினுள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டிருத்தல் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.3	சகல கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.4	2014.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்கமுடைய பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சம்பள அட்டை மென்பொருள் பக்கேஜ் பயன்படுத்தப்படும்போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.·.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
4	**வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.3	மீளாய்வாண்டுக்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்டம் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
4.4	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.5	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு(டேனு) குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.6	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்று குறித்த திகதியில் திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
4.7	காலாண்டு அறிக்கைகள் குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		

5	**கணக்காய்வு விசாரணை**			
	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கப்படுதல்	இணங்குகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) னுஆயு/1-2019 இன்படி, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
7.1	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 4 ஏனும் உரிய வருடத்தில் நடத்தப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
8	**சொத்துக்களுக்கான முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களுக்கான கொள்வனவு மற்றும் அகற்றல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான தொடர்பு உத்தியோகத்தரை நியமித்து குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.3	பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட் கணிப்பீடுகள் நடத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.\.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.5	பயனற்ற பொருட்களுக்கான அப்புறப்படுத்தல் நி.பி.772 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல்	இணங்குகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	ஒதுக்கத்தின் வாகனங்கள் தொடர்பாக தினசரி ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பித்தல்	இணங்குகின்றது		
9.2	வாகனங்கள் பயனற்றதாகமாறி 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
9.3	வாகன லொக் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுதல்	இணங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துத் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கையெடுத்தல்	இணங்குகின்றது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30ஆம் இலக்கமுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் மீண்டும் பரிசோதிக்கப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.⁚.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
9.6	குத்தகைக் காலப்பகுதியின் பின்னர் குத்தகை வாகனங்களின் முழுமையான உரிமை மாற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10	**வங்கி கணக்குகளுக்கான முகாமைத்துவம்**			
10.1	வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு,உறுதிபடுத்தப்பட்டு உரிய தேதிக்குள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து வந்த செயலற்ற வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தநிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படிசெயற்பட்டு குறித்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
11	**ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	மேற்கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரம்புகள் மீறப்படாமல் செலவிடப்படுதல்	இணங்குகின்றது		
11.2	நி.பி.94(1) இன் பிரகாரம் வருட இறுதியில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளை விஞ்சிச் செல்லாத பொறுப்புக்கள்	இணங்குகின்றது		
12	**அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.∵.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
12.2	நிலுவைக் கடன் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவைக் கடன்கள் தீர்க்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
13	**பொது வைப்புக்கணக்கு**			
13.1	காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் நிலுவை திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்குஅனுப்பப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.2	நி.பி.371இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட குறிப்பிட்ட பணிக்கான துணைப் பணி முற்பணம் குறிப்பிட்ட பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல்	இணங்குகின்றது		
14.3	நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்படாத வகையில் குறித்த பணிக்கான துணைப் பணி முற்பணம் விநியோகிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.4	பணி முற்பணக் கணக்கின் நிலுவை திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்	இணங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.்.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
15.1	குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானத்தில் மீள் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
15.3	நி. பி. 176 இன்படி நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லைக்குள் பதவியணி பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
16.3	2017.09.20 ஆம் திகதிஆளுனுசுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
17	**பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்கப்படுதல்**			
17.1	தகவல் அறிவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடொன்று இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.∴.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைதளத்தின் ஊடாக அல்லது மாற்றுவழிகளின் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக மக்களின் பாராட்டுக்களை.∴.குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
17.3	தகவல் அறிவிதற்கான சட்டத்தின் 08ஆம் மற்றும் 10 ஆம பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இருதடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
18	**பிரஜைகள் சாசனம் நடைமுறைபடுத்தப்படுதல்**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்கமுடைய பொதுநிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் ∴ சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
18.2	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜைகள் ∴ சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்படுதல் மற்றும் நடைமுறைபடுத்தப்படுதல் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தினால் முறையொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
19	**மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுதல்**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இணைப்பு 02 மாதிரியை அடிப்படைக்கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்குகிறது		
19.2	பதவியணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களுக்காகவும் வருடமொன்றில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிபடுத்தப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுதல் பற்றிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிற் செயற்பாடு காட்டுதல்**			
20.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கடந்த வருடங்கள் தொடர்பாக விநியோகிகப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		